## விருதுநகர் வடக்கு மாவட்டம்

# சிவகாசி மாநகரம், மாவட்ட பிரதிநிதி பொறுப்புக்கான தேர்தல் வேட்புமனுத் தாக்கல்

விருதுநகர் வடக்கு மாவட்டம், சிவகாசி மாநகரம், மாவட்ட பிரதிநிதி பொறுப்பு நிரப்பட வேண்டியிருப்பதால்,

விருதுநகர் வடக்கு மாவட்டம், சிவகாசி மாநகரம், மாவட்ட பிரதிநிதி பொறுப்புக்கு தேர்தல் நடைபெற உள்ளதை யொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து அதற்குரிய கட்டணத்துடன் தலைமைக் கழகத்தில் 2025 **ஜூன் 20 (வெள்ளிக்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணிக்குள்ளாக** செலுத்தி இரசீது பெற்றுக் கொள்ளவேண்டும்.

**தகுதி விவரம்**

வேட்பு மனு முன்மொழிபவரும், வழிமொழிபவரும் மாநகரத்திற்கு உட்பட்ட வட்டச் செயலாளர்கள் பகுதிக் கழக நிர்வாகிகள் - பகுதிக் கழகத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகரப் பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

**வேட்புமனுக் கட்டண விவரம்**

**மாவட்ட பிரதிநிதி பொறுப்பு**

**பொறுப்புக்கு வேட்புமனுக் கட்டணம் ... ரூ.5000/-**

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.500/- கட்டணம் செலுத்தி தலைமைக் கழகத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 18.06.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### தஞ்சை தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆதி.ராஜேஷ்வரன் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு தஞ்சை தெற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய–நகர–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 21.06.2025 | பேராவூரணி நகரம் | காந்தி பூங்கா | ந.மணிமுத்து<br>மு.காவியா |
| 2 | 22.06.2025 | மதுக்கூர் மேற்கு ஒன்றியம் | முக்கூட்டு சாலை, மதுக்கூர். | அ.அப்துல் மஜீது<br>இரா.செ.கபில்சாய் |
| 3 | | பட்டுக்கோட்டை மேற்கு நகரம் | திட்டக்குடி | அ.அப்துல் மஜீது<br>இரா.செ.கபில்சாய் |
| 4 | 23.06.2025 | மதுக்கூர் கிழக்கு ஒன்றியம் | கன்னியாக்குறிச்சி | ந.மணிமுத்து,<br>ஜோ.வியானி விஷ்வா |
| 5 | 25.06.2025 | அதிராம்பட்டினம் கிழக்கு நகரம் | பேருந்து நிலையம் | அ.அப்துல் மஜீது<br>ஜோ.வியானி விஷ்வா |
| 6 | 26.06.2025 | பட்டுக்கோட்டை தெற்கு ஒன்றியம் | கடைவீதி, முதல்சேரி. | ந.மணிமுத்து<br>ஜோ.வியானி விஷ்வா |
| 7 | 27.06.2025 | திருவோணம் தெற்கு ஒன்றியம் | கடைவீதி, ஆனந்த கோபாலபுரம். | மதுக்கூர் ஆர்.மகாலிங்கம்<br>கோ.இரகுநாத் |
| 8 | | பட்டுக்கோட்டை வடக்கு ஒன்றியம் | கடைவீதி, நாட்டுச்சாலை. | மெட்ரோ டி.சேகர்<br>கோ.இரகுநாத் |
| 9 | 28.06.2025 | பெருமகளூர் பேரூர் | கடை வீதி, பெருமகளூர். | மதுக்கூர் ஆர்.மகாலிங்கம்<br>மு.காவியா |
| 10 | 29.06.2025 | பேராவூரணி தெற்கு ஒன்றியம் | கொன்றைக்காடு | ந.மணிமுத்து<br>மு.காவியா |
| 11 | 30.06.2025 | சேதுபாவாசத்திரம் தெற்கு ஒன்றியம் | கடைவீதி, ரெட்டைவயல். | மெட்ரோ டி.சேகர்<br>வெ.பூர்ணிமா |
| 12 | 01.07.2025 | பட்டுக்கோட்டை நகரம் | அறந்தாங்கி முக்கம் | அ.அப்துல் மஜீது<br>வெ.பூர்ணிமா |
| 13 | 03.07.2025 | பட்டுக்கோட்டை கிழக்கு ஒன்றியம் | கடைவீதி, மஞ்சவயல். | அ.அப்துல் மஜீது<br>வெ.பூர்ணிமா |
| 14 | 04.07.2025 | அதிராம்பட்டினம் மேற்கு நகரம் | பெரிய மீன் மார்க்கெட் | ந.மணிமுத்து<br>கோ.இரகுநாத் |
| 15 | 05.07.2025 | பேராவூரணி வடக்கு ஒன்றியம் | உதய சூரியபுரம் | மெட்ரோ டி.சேகர்<br>கோ.இரகுநாத் |
| 16 | 06.07.2025 | சேதுபாவசத்திரம் வடக்கு ஒன்றியம் | கொள்ளுக்காடு | ந.மணிமுத்து<br>இரா.செ.கபில்சாய் |

**தஞ்சாவூர்**
நாள் : 18-06-2025





திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் நேற்று (19.06.2025 – வியாழக்கிழமை) காலை 08.30 மணியளவில் சத்திரம் பேருந்து நிலையம் வி.என். நகர், திருச்சி தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் என்.கோவிந்தராஜன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலந்துகொண்டு கழகத் தலைவர் – முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழக உறுப்பினர் சேர்க்கையை 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற தலைப்பின்கீழ் ஒருங்கிணைத்துள்ளது குறித்தும், BLA2, BLC பணிகள் குறித்து,கழக ஆக்க பணிகள் குறித்தும் எடுத்துரைத்தார் .

### விவசாயிகளுக்கு எதிரான மூன்று வேளாண் சட்டங்களுக்கு ஆதரவளித்த விவசாயிகளின் எதிரிகளே!

# 10 ஆண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் 'மா" விவசாயிகளுக்கு நீங்கள் செய்தது என்ன? 'மா" விவசாயிகளுக்கு ஆதரவு போராட்டமா? அரசியல் நாடகமா?

### தி.மு.க. மாநில அமைப்புசாரா ஓட்டுநர் அணி மாநிலச் செயலாளர் டி.செங்குட்டுவன் கேள்வி!

**கிருஷ்ணகிரி, ஜூன் 20 - தி.மு.க. மாநில அமைப்பு சாரா ஓட்டுநர் அணி மாநிலச் செயலாளர் டி.செங்குட்டுவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-**



கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 'மா" விவசாயிகளுக்கு ஆதரவாக போராட்டம் நடத்த உள்ள அ.தி.மு.க.வினர் 10 ஆண்டுகால அ.தி.மு.க. ஆட்சியில் 'மா" விவசாயிகளுக்கு செய்தது என்ன?

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சுமார் 1லட்சம் ஏக்கரில் மா பயிரிடப்பட்டு, ஆண்டிற்கு சுமார் 3 லட்சம் மெட்ரிக் டன் 'மா" விளைகிறது. மேற்படி 'மா" விளைச்சல் ஆண்டிற்காண்டு கூடுதலாகவும் அல்லது குறைவாகவும் மாறி மாறி விளையும். அதேப்போல் ஆண்டிற்காண்டு 'மா" விலையும் வித்தியாசப்படுவது தொடர்ந்து நடைபெற்று வருவது அனைவரும் அறிந்ததே!

2 லட்சத்திற்கு மேற்பட்ட பணியாளர்கள், ஆண்டு தோறும் மாம்பழக்கூழ் ஆலைகள் மற்றும் மா அறுவடை பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள். ஆண்டுதோறும் சுமார் ரூ.700 கோடிக்கு மேல் மாழ்பழக்கூழ் ஏற்றுமதி மற்றும் மாம்பழ விற்பனை மூலம் அந்நிய செலாவணி கிடைத்து வருகிறது.

இந்தாண்டு விளைச்சலை உரிய நேரத்தில் கொள்முதல் செய்யாமல் மாம்பழக்கூழ் ஆலை உரிமையாளர்கள் 'சிண்டிகேட்" போட்டுக்கொண்டு கொள்முதல் செய்யாததாலும், 'கல்டார் மருந்தின்" காரணமாகவும், மாம்பழங்கள் மரத்திலேயே கெட்டு அழுகி விழுகிறது என்பது அனைவரும் அறிந்ததே. இதனால் 'மா" விவசாயிகள் பாதிக்கப்பட்டது உண்மையே!

இந்நிலையில், கடந்த 12.06.2025 அன்று சேலத்திற்கு வருகை தந்த முதல்வர் அவர்கள் மற்றும் வேளாண்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோரிடத்தில் 'மா" விவசாயி என்கிற முறையிலும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் என்கிற முறையிலும் நான் 'மா" விவசாயிகளை காப்பாற்றிட மாம்பழக்கூழ் ஆலை உரிமையாளர்களை உடனே ஆலைகளை திறந்து மாம்பழங்களை கொள்முதல் செய்யக் கோரியும்,

குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயம் செய்திட கோரியும் மனு அளித்ததின் பேரில் முதல்வர் அவர்கள், வேளாண்துறை அமைச்சர் மூலம் மாவட்ட ஆட்சியரிடம் பேசி, உடனே ஆலைகளில் மாம்பழங்களை கொள்முதல் செய்திட அறிவுறுத்தியதின் பேரில், தற்போது 'மா"; கொள்முதல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 'மா" விவசாயிகளுக்கு குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயம் செய்வது குறித்தும் அரசு பரிசீலிக்க துவங்கியுள்ளது. இதை தெரிந்துக் கொண்ட அதிமுகவினர் தேர்தல் நெருங்குவதால் போராட்டம் என்கிற பெயரில், 'தேர்தல் நாடகம்" நடத்த முயற்சிக்கிறார்கள். நீங்கள் என்ன நாடகம் போட்டாலும் மூன்று வேளாண் சட்டங்களை ஆதரித்ததை விவசாயிகள் மறக்கவில்லை.

**'அரசு சார்பில் மாம்பழக்கூழ் ஏற்றுமதி மையம் (MANGO EXPORT ZONE)**

கடந்த 20062011 தி.மு.க. ஆட்சியில் 'மா" விவசாயிகள் எதிர்கால நலன் கருதி, சட்டமன்றத்தில் நான் பல முறை கேட்டுக் கொண்டதன் அடிப்படையில், முத்தமிழறிஞர் கலைஞர், அன்றைய துணை முதல்வரும், இன்றைய முதல்வருமான - தளபதியார் ஆகியோரின் அறிவுறுத்தல் பேரில், அன்றைய மாவட்ட ஆட்சியர் சந்தோஷ்பாபு முயற்சியால் மாம்பழக்கூழ் ஏற்றுமதி மையம் அமைத்திட கிருஷ்ணகிரி ஒசூர் சாலையில் சிக்காரி மேடு அருகில் நிலம் கையகப்படுத்தப்பட்டு 'கிரிஸ்மா" என்கிற பிராண்டை உருவாக்கி கோப்புகள் தயாரிக்கப்பட்டு, மத்திய அரசின் நிறுவன நிதி பங்களிப்புடன் நிதி உதவி கோரப்பட்டு பூர்வாங்க பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வந்தது.

**2011 ஆட்சி மாற்றத்திற்கு பின் திட்டத்தை கிடப்பில் போட்ட அ.தி.மு.க. ஆட்சி!**

2011 ல் அதிமுக ஆட்சிக்கு வந்து 2021 வரை 10 ஆண்டுகள் ஆட்சி செய்தீர்களே! அ.தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் உயர் கே.பி.முனுசாமி அமைச்சராக உயர்ந்த பதவியில் இருந்தீரே!

அப்போது எல்லாம் 'மா" விவசாயிகள் ஞாபகம் வரவில்லையா? 'மா" விவசாயிகளுக்கு எள்முனையாவது எதாவது செய்ததுண்டா? தி.மு.க. ஆட்சி கொண்டு வந்த மாம்பழக்கூழ் எற்றுமதி மையம் தொடங்கி நடத்திட மனம் வரவில்லையா?

உங்களது 10 ஆண்டுகால ஆட்சியில் 'மா" விவசாயிகள் பாதிக்கப்படவே இல்லையா? மா விவசாயிகளுக்கு குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயம் செய்திட ஏன் முயலவில்லை? உங்கள் ஆட்சியில் பாதிக்கப்பட்ட விவசாயிகள், மா மரங்களை வெட்டவில்லையா?

பாரூர், அரசம்பட்டி பகுதிகளில் மழை, புயல் காற்றால் லட்சக்கணக்கான தென்னை மரங்கள் நாசமானதே! நஷ்ட ஈடு ஏதாவது கொடுத்தீர்களா? வறட்சியால் பல லட்சம் மா மரங்கள், தென்னை மரங்கள் காய்ந்து போனதே, விவசாயிகளக்கு நிவாரணம் ஏதாவது வழங்கினீர்களா?

**தி.மு.க. அரசு எப்படி பொறுப்பேற்க முடியும்?**

'கல்டார் மருந்து" பயன்படுத்தியதால் 'பூஞ்ச்" நோய் ஏற்பட்டு மாம்பழம் அழுகியதற்கும், தனியார் மாம்பழக்கூழ் ஆலை உரிமையாளர்கள் மாம்பழங்கள் கொள்முதல் செய்யாததற்கும் 'தி.மு.க. அரசு எப்படி பொறுப்பேற்க முடியும்" அதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி, துணை பொதுச்செயலாளர் கே.பி.முனுசாமி ஆகியோர் 2025 மார்ச் 12 முதல் மே வரை தமிழ்நாடு சட்டமன்றம் நடந்ததே! மா விவசாயிகளை பற்றி ஏன் பேசவில்லை. 'மா" விவசாயிகள் அப்போது உங்கள் கவனத்திற்கு வரவில்லையா?

விவசாய சங்கங்கள் கோரிக்கை மற்றும் எங்களது கோரிக்கைகளை ஏற்றுக் கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் தளபதியார் அவர்கள் 'மா" விவசாயிகள் உற்பத்தி செய்த மாம்பழங்களை கொள்முதல் செய்திட மாவட்ட ஆட்சியர் மூலம் உத்திரவிட்டு கொள்முதல் நடைபெற்று வருகிறது.

மாம்பழத்திற்கு குறைந்தபட்ச ஆதாரவிலை நிர்ணயம் செய்திட ஆலோசனைகள் நடைபெற்று வருவதை அறிந்துக்கொண்ட அதிமுகவினர் 'அரசில் நாடகத்தை" அரங்கேற்றியுள்ளனர்.

உங்கள் அரசியல் நாடகம் எடுப்படாது? விவசாயிகளுக்கு எதிரான மூன்று வேளாண்மைச் சட்டங்களை ஆதரித்த போதே! நீங்கள் விவசாயிகளின் எதிரிகள் என்பது தெரிந்துவிட்டது.

நான்காண்டுகால திராவிட மாடல் ஆட்சியில் சுமார் 2 லட்சம் விவசாயிகளின் பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கியதோடு, மழை, புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம், வட்டியில்லா பயரிக்கடன், கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு 'தோட்டக்கலை கல்லூரியும்", கம்பு ராகி விவசாயிகளை ஊக்குவிக்க ரேஷன் கடைகளில் சிறுதானிய கொள்முதலையும் ஊக்குவித்து விவசாயிகளுக்கு தனியாக நிதிநிலை அறிக்கை, கரும்பு, நெல்லுக்கு கூடுதல் விலை வழங்கியும், கடந்த நான்கு ஆண்டுகளாக ஜூன் 12ல் மேட்டூர் அணையை திறந்தும் விவசாயிகள் வயிற்றில் பால் வார்த்து வரும் முதல்வர் அவர்களின் பின்னால் தான் விவசாயிகள் நிற்பார்கள் என்பதை 2026 சட்டமன்ற தேர்தல் நிருபிக்கும். இது உண்மை.

இவ்வாறு தி.மு.க. மாநில அமைப்புசாரா ஓட்டுநர் அணி மாநிலச் செயலாளர் டி.செங்குட்டுவன் தெரிவித்துள்ளார்.



சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் மாநிலங்களவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதனை அடுத்து முன்னாள் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் அவர்களின் நினைவிடத்தில் சான்றிதழ் வைத்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் மாவட்ட துணை செயலாளர் சுரேஷ்குமார், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், மலர் விழி, சந்திரமோகன், ஒன்றிய செயலாளர்கள் வெண்ணிலா சேகர், மாணிக்கம், உமா சங்கர் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.